செய்யவேண்டுமென்று அதிலே குறிப்பிட்டு இருந்தோம். அதை அனுப்பிய முறை நியாயமான முறை என்பதன் விளைவாக, அவர்கள் தாங்களே அதைப்பற்றி குறிப்பிடுவது போல கடிதம் எழுதி, அது அங்கே இருக்கிற தூதுவரிடம் அளிக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தி இரண்டு நாட்களுக்கு முன் அரசுக்குக் கிடைத்திருக்கிறது என்ற நல்ல செய்தியை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். மைய அரசும் இதிலே அக்கறை காட்டியிருக்கிறது என்பதையும்,அதற்கு இந்த தீர்மானம் இன்னும் உதவும் என்பதையும் எடுத்துக் காட்டி, இந்தத் தீர்மானத்தை இங்கே கொண்டு வந்தவர்களை நான் பாராட்டி, ஆதரித்தவர்களுக்கு நன்றி சொல்லி, நான் என்னுடைய கருத்துக்களை வைத்ததற்காக நீங்கள் மகிழ்வீர்கள், உண்மை நிலைமையை நீங்கள் பாராட்டுவீர்கள் என்ற நம்பிக்கையோடு, நிச்சயமாக உங்கள் ஆதரவோடு அந்த உயிர்களை காப்பாற்றுவதற்கு எங்களால் இயன்ற அனைத்து வழிகளிலும் நாங்கள் பாடுபடுவோம் என்ற உத்தரவாதத்தைத் தெவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''இலங்கையில் தமிழர் உரிமை காக்க போராடிய திரு. செ. யோகச்சந்திரன் என்ற குட்டிமணி, திரு. க. ஜெகநாதன் ஆகிய இரு தமிழ் இளைஞர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு இருப்பதை ரத்து செய்ய, தலையிட்டு ஆவண செய்யும்படி இந்திய தலைமை அமைச்சருக்குப் பரிந்துரை செய்யும்படி, தமிழக அரசை இப்பேரவை வேண்டிக்கொள்கிறது.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

8. அரசினர் தீர்மானங்கள்— தொடர்ச்சி.

(ஆ) பேரவை அலுவல் வரிசை மாற்றம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையின் விதி 30(3)-ன் கீழ் நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம் 10, அரசினர் சட்ட முன்வடிவுகள் (ஆய்வு செய்தல்) என்ற தலைப்பின்கீழ் வரிசை எண் (i) 1982-ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 43/1982) என்ற சட்ட முன்வடிவு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் மேலவையில் இருப்பதன் காரணமாக பின்னர் எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும். மற்ற சட்டமுன்வடிவுகள் தொடர்ந்து வரிசைப்படி எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.

1982 செப்டம்பர் 10] *[டாக்டர். இரா. நெடுஞ்செழியன்]*

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஊ) கேளிக்கை வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1982.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு: தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

(ஈ) கேளிக்கை வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு 1982.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்: ''தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்து, மேற்படி சட்டமுன்வடிவு @ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.''

திரு. அ ரகுமான்கான்: ஒரு ஒழுங்கு பிரச்னை கிளப்ப விரும்பு கிறேன். அண்ணாமலைப் பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன் வடிவை நேற்றே, அமைச்சர் வரவில்லையென்று விட்டு விட்டார்கள், அஜெண்டாபடி கேளிக்கை வரிச் சட்டம், அதற்குப் பிறகுதான் வரவேண்டும். ஆனால் உங்களுடைய சௌகரியத் திற்காக நாங்கள் தயாராக இல்லாத நிலையில்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேளிக்கை வரிச் சட்ட முன்வடிவை முதலில் எடுத்துக் கொள்வதற்காகத்தான் தீர்மானம் மொழியப்பெற்று அது நிறைவேறிவிட்டது. ஆகவே, அந்தப் பிரச்னை அதோடு முடிந்துவிட்டது. அத்தீர்மானத்தை அவையும் ஏற்றுக்கொண்டுவிட்டது.

திரு. அ. ரகுமான்கான்: நான் ஒரு டிஸ் ஆர்டரைத் தங்களுடைய கவனததிற்குக் கொண்டு வருகிறேன். நான் சொல்வது தவறாக இருந்தால் உட்கார்ந்து விடுகிறேன். எனக்கு ஒரே ஒரு நிமிடம் அனுமதி கொடுங்கள்.

@ 1982 செப்டம்பர் 4 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.